# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 379/9 — 1985 දෙසැම්බර් 10 වැනි අඟහරුවාදා — 1985.12.10

379/9 ம் இலக்கம்—1985 ஆண்டு டிசெம்பர் மாதம் 10 ந் திகதி செவ்வாய்க்கிழமை


## பகுதி I: தொகுதி (I) — பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ.—பீ 21/78 II

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

கலாநிதி. வீ.எஸ். விஜேவீர,
செயலாளர்.
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு, 10, டிசெம்பர், 1985.

கட்டளைச்சட்டம்

1. 1980 ஏப்பிரல் 10 ஆம் தேதிய 83/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பட்டப் படிப்புக்கு மேற்பட்ட மருத்துவக்கல்வி நிறுவகக் கட்டளைச்சட்டம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அதன் ஏழாம் பந்தியின் (6) ஆம் (7) ஆம் உட்பந்திகளில் காணப்படும் "அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரை பல்கலைக்கழகப் பதிவாளர் அப்பதவிக்குரிய நாளாந்தக் கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்" என்னுஞ் சொற்களை விட்டுவிடுவதன்மூலமும் ;

(2) அதன் 10 ஆம் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப்பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:

"10. முகாமைச்சபை (இது இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பிடு செய்யப்படும்) நிறுவகத்தின் கல்விக் குழுவாகவும் நிறைவேற்றுக் குழுவாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அது பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்:—

(1) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது

(அ) பணிப்பாளர் ;

(ஆ) உயர்கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர்;

(இ) சுகாதாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர்;

(ஈ) போதனா வைத்தியசாலைகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(உ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(ஊ) சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி;

(எ) போதனா வைத்தியசாலைகள் பணிப்பாளர் ;

(ஏ) மருத்துவச் சேவைகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஐ) இலங்கை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறையின் துறைத்தலைவர் ;

(ஒ) இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறையின் துறைத்தலைவர் ;

(ஓ) இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறையின் துறைத்தலைவர் ;

(ஔ) இலங்கை றுகுணுப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறையின் துறைத்தலைவர் ;

(2) பின்வரும் வேறு உறுப்பினர்கள், அதாவது :—

(அ) இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறைப் பகுதிகளின் தலைவர்களுள்ளிருந்து அத்தகைய கல்வித்துறைச் சபையினால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஒருவர் ;

(ஆ) இலங்கை பேராதனை பல்கலைகழகத்தின் மருத்துவக் கல்வித்துறைப் பகுதிகளின் தலைவர்களுளிருந்து அத்தகைய கல்வித்துறைச் சபையினால் தேர்தெடுக்கப்படும் உறுப்பினர் ஒருவர் ;

(இ) இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறைப் பகுதிகளின் தலைவர்களுளிருந்து அத்தகைய கல்வித்துறைச் சபையினால் தேர்ந்தெடுக்கபடும் உறுப்பினர் ஒருவர்;

(ஈ) இலங்கை றுகுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவ கல்வித்துறைப் பகுதிகளின் தலைவர்களுளிருந்து அத்தகைய கல்வித்துறைச் சபையினால் தேர்தெடுக்கபபடும் உறுப்பினர் ஒருவர் ;

(உ) கல்வி, உயர்தொழில், அறிவியல் அல்லது நிருவாகச் செயலாருகளில் சிறப்புச் சேவை ஆற்றிய ஆட்களிலிருந்து ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட எட்டு உறுப்பினர்கள் ;

ஆயின் அவ்வாறு நியமிக்கப்பட்டோருள் குறைந்தது ஐந்து உறுப்பினராவது மருத்துவ உயர் தொழில் உறுப்பினர்களுளிருந்து நியமிக்கப் பட்டவராயிருத்தல் வேண்டும்.".

(3) அதன் 11 ஆம் பந்தியில் —

(1) அப்பந்தியின் (6) ஆம் உட்பந்தியில் "சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "சபையின் எவரேனும் தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(11) அப்பந்தியின் (7) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலமும் :—

"(7) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஆலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்க வேண்டியவாறான அத்தகைய ஊதியம் அல்லது படிகள் சபை உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்."

(4) அதன் 13 ஆம் பந்தியில்உட்பந்தி (ஔ) என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்;

"(க) சட்ட மருத்துவம் ;

(ங) நுண்ணுயிரியல் ;

(ச) செவி, குரல்வளை நோயியல் ;

(ஞ) ஊடுகதிர் மருத்துவமுறையும் ஒன்கோவியலும்".

(5) அதன் 14 ஆம் பந்தியில் —

(1) அப்பந்தியின் (1) ஆம் (2) ஆம் (3) ஆம் உட்பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்திகளை இடுவதன்மூலமும் :—

"(1) இலங்கையிலுள்ள ஒரு பல்கலைக்கழகம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் எந்தச் சிறப்புக்கூறுக்காக ஒரு கற்கைப் பகுதியைத் தாபித்துள்ளதோ அல்லது தாபித்துள்ளனவோ அந்தச்சிறப்புக் கூறு தொடர்பில் ஒரு கற்கைச் சபை தாபிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய சபை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(அ) பணிப்பாளர் ;

(ஆ) தோதான உயர்தொழிற்குழுவினால் அத்தகைய உயர் தொழிற்குழு உறுப்பினர்களிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஆறு உறுப்பினர்கள் ;

(இ) இலங்கையின் எப்பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறை இருக்கின்றதோ அப்பல்கலைக்கழகமொவ்வொன்றினதும் கற்கைப் பகுதியின் தலைவர் ;

(ஈ) இலங்கை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறைச் சபையினால் அத்தகைய கல்வித்துறையின் பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையேயிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் ;

(உ) இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறைச் சபையினால் அத்தகைய கல்வித்துறையின் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் ;

(ஊ) இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறைச் சபையினால் அத்தகைய கல்வித்துறையின் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் ; அத்துடன்

(எ) இலங்கை ருகுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறைச் சபையினால் அத்தகைய கல்வித்துறையின் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர்.

(2) இலங்கையிலுள்ள பல்கலைக்கழகம் எதுவும் எந்தச் சிறப்புக் கூறுக்காக கற்கைச் சபையொன்றைத் தாபிக்கவில்லையோ அந்தச் சிறப்புக்கூறு தொடர்பில் கற்கைச் சபையொன்று தாபிக்கப்பட்டுள்ள விடத்து அத்தகைய கற்கைச்சபை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பணிப்பாளர் ;

(ஆ) தோதான உயர்தொழிற்குழு உறுப்பினரிடையேயிருந்து அத்தகைய உயர் தொழிற்குழுவால் தெரிவு செய்யப்பட்ட ஐந்து உறுப்பினர்கள் ;

(இ) இலங்கை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறைச் சபையினால் அத்தகைய கல்வித்துறையின் பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையேயிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் ;

(ஈ) இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறைச் சபையினால் அத்தகைய கல்வித்துறையின் பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் ;

(உ) இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறைச் சபையினால் அத்தகைய கல்வித்துறையின் பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையேயிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் ; அத்துடன்

(ஊ) இலங்கை ருகுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறைச் சபையினால் அத்தகைய கல்வித்துறையின் பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையேயிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர்."

(II) அப்பந்தியின் (7) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலமும் :—

"(7) ஒவ்வொரு கற்கைச் சபையும் தோதான கற்கைச் சபையினது விதப்புரையின்மீது சபையினால் நியமிக்கப்பட வேண்டிய செயலாளர் ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

(6) அதன் 24 ஆம் பந்தியில்—

(1) அப்பந்தியின் (2) ஆம் காப்புவாசகத்தை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் காப்புவாசகங்களை இடுவதன்மூலமும் :—

"(2) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் பல்கலைக்கழகம் 13 ஆம் பந்தியினது ஏற்பாடுகளின் கீழ் மருத்துவத்தின் எக்கல்விச் சிறப்புக் கூறு தொடர்பாக நிறுவகத்தினால் கற்கைச்சபை தாபிக்கப்படவில்லையோ அக்கல்விச் சிறப்புக் கூறு எதனிலும் அத்தகைய பட்டங்கள், டிப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை வழங்கிச் சூட்டலாம் ;

(3) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் பல்கலைக்கழகம், 13 ஆம் பந்தியினது ஏற்பாடுகளின்கீழ் மருத்துவக் கல்விச்சிறப்புக்கூறு எது தொடர்பாக ஆம் நிறுவகத்தினால் கற்கைச் சபையொன்று தாபிக்கப்பட்டிருப்பினும் சரி, அல்லாவிடினும்சரி, அத்தகைய கல்விச்சிறப்புக்கூறில் முழுமையாக அல்லது பகுதியளவில் சார்ந்த பட்டப்பின் படிப்புப் பட்டங்களை வழங்கிச் சூட்டலாம்."

(II) அப்பந்தியின் (3) ஆம் காப்புவாசகத்தை அதன் (4) ஆம் காப்புவாசகமென மீள இலக்கமிடுவதன்மூலமும், அத்துடன்

(7) அதன் 25 ஆம் பந்தியில் "மருத்துவக் கல்விச்சிறப்புக்கூறு" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"மருத்துவக் கல்விச் சிறப்புக்கூறு" என்பது உணர்வழிவியல், சமுதாய மருத்துவம், குடும்ப மருத்துவமும் பொதுமருத்துவத் தொழிலும், மருத்துவ கல்வி, மகப்பேற்றியல், பெண்ணோயியல், கண் மருத்துவவியல், நோயியல், குழந்தை மருத்துவவியல், உளமருத்துவவியல், இரேடியோவியல், அறுவையியல், சட்டமருத்துவம், நுண்ணுயிரியல், செவி, குரல்வளை நோயியல், ஊடுகதிர் மருத்துவமுறையும், ஒன்கோவியலும், எனவும் அல்லது நிறுவனத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின்பேரில் ஆணைக்குழு அங்கீகரித்த வேறு ஏதேனும் சிறப்புக் கூறு எனவும் பொருள்படும்.".

12-529